<u>**பத்திரிகைச் செய்தி**</u>

சென்னை-32, கிண்டி, தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் இரண்டாம் நிலை காவலர் பதவிக்கான பொது தேர்வுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சியில் கலந்துகொள்ள விருப்பமும், தகுதியும் உள்ள (குறைந்த பட்சம் 10ஆம் வகுப்பு தேர்ச்சி) இத்தேர்விற்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் தங்களின் வயது/சாதி/கல்விச் சான்றிதழ்களின் நகல்கள் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலக அடையாள அட்டையுடன் **15.03.2017** அன்று **காலை11.00** மணிக்கு சென்னை-32, கிண்டி, ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பு அலுவலக வளாகத்தில் செயல்படும், தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நேரில் ஆஜராகி உரிய விவரங்களை பெற்று, இலவச பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயன் அடையுமாறு தெரிவிக்கப்படுகிறது.

துணை இயக்குநர் மாவட்ட ஆட்சியர்